(ஊ) குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(எ) வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. கு.ப.கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-10

4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1995-96, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995-96 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

இம்மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகளில், வருவாய்க் கணக்கில் ரூ. 1,183.65 கோடியும், மூலதன, கடன் கணக்குகளில் ரூ. 145.02 கோடியும் அடங்கும்.